

அறிஞர் அண்ணாவின்

# மேவிழ

அலமேலு நிலைய வெளி

KS.&Co

அண்ணாவின்

# மே விழா முழக்கம்

**1951**

ARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

★

வெளியிடுவோர்:
**அலமேலு நிலையம்**
13, அருணசல ஆச்சாரி தெரு,
சென்னை — 5.

1951 செப்டம்பர்
பதிப்புரிமை

42449-A

சென்னை திருவல்லிக்கேணி திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி., அவர்கள் தலைமையில் 1-5-51 அன்று நடைபெற்ற மே தின விழாவில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தை மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற நூல்வடிவில் தந்துள்ளோம்.

விலை 6 அணா

குறிப்பெடுத்துதவியவர்
அன்புப்பழம்நீ

# அண்ணாவின் மே விழா முழக்கம்

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே!!

மேதின விழாவைத் திராவிட முன்னேற்றக் கழகம் திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே கொண்டாட ஏற்பாடு செய்திருப்பது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சென்னைக் கடலிலே பிறந்து மிதந்தோடிவரும் இளங்காற்றை உட்கொண்டு இளைஞரும் இளநங்கையரும் கூடி இன்ப நகையாடிக் காதல்புரிகின்ற இடத்திலேதான் நாம் இன்று கூடியுள்ளோம். கவலைதரும் பேச்சைப் பேச இங்கே யாரும் பொதுவாகக் கருதுவதில்லை. ஏனென்றால் பெரும் பாலும் உல்லாசபுரியிலே உலவுபவர்கள்தாம் இக் கடற்கரைக்கு இனிய காற்றைப் பருக வருவார்கள்.

## அலைகடல் அருகே மக்கட் கடல்!

ஆனால் நாம் இன்று கூடியுள்ளோம் இங்கு—தொழிலாளர் கூடியுள்ளனர், தொழிலாளர் விழாவாகிய மேதினத்தைக் கொண்டாட; தொழிலாளர் குறைகள்பற்றிப் பேச; தொழிலாளர்க்கு ஆக்கந்தரும் திட்டங்களில் கருத்தைச் செலுத்த—இவ்வளவுக்கும் மேலாக, தொழிலாளர் தளர்ந்த நரம்புகளில் முறுக்கேற்ற; அவர்கள் அயர்ந்த உள்ளத்தில் சிந்தனையைத் தூண்ட; அவர் தம் கலகலத்த அணியில் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்க்க! இதனாலேதான் காதலும் கனவும், உல்லாசமும் கிளர்ச்சியும் காணப்படவேண்டிய இக் கடற்கரையிலே இன்று சிந்தாகுலத்தினிடையே சிந்தனைக்கு வேலைகொடுக்க இத்தனை பேர்

இம் மாபெருங் கூட்டத்தில் திரண்டிருக்கிறோம். இதனலேதான் திராவிடக் கடலுக்கெதிராக ஒரு திராவிட மக்கட் கடலாக, கடலாரவாரத்துடன் போட்டியிடும் ஒரு மக்கள் ஆரவாரக் கடலாக இம் மணற்பரப்பு காட்சியளிக்கிறது.

## மேதின விழா—மேதினி எங்கும்!

ஆண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும், நாள்தோறும்; அல்லும் பகலும் உழைத்து உழைத்து உருக்குலைந்துவரும் பாட்டாளி மக்களிடையே, இன்று மேதின விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த மேதினம் உழைப்பாளிகள் அனைவருக்கும் உகந்த நாள்! மேதினியெங்கும் இன்று மேதினம் கொண்டாடப்படுகிறது. இதே நேரத்திலே, உலகின் பல்வேறு நாடுகளிலே, பல்வேறு நகர்களிலே இதே மேவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெறுகிறது. மாஸ்கோவிலே மேவிழா; ஜெர்மனியிலே, பிரான்ஸிலே மேவிழா; அட்லி சர்க்கார் அனுமதித்திருந்தால் இங்கிலாந்திலேகூடக் கொண்டாடப்பட்டிருக்கும் மேவிழா! அமெரிக்காவிலே இதுபோல இன்று மேவிழாக் கொண்டாடப்படும்.

## மாஸ்கோவிலே!

மாஸ்கோவிலே மேவிழா இன்று அபரிமிதமான உற்சாகத்தோடு கொண்டாடப்படுகிறது. மாஸ்கோவிலே மேதின விழாவில் ரஷ்யநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சி கொண்டாடுவர். வீதிகள் எங்கும் தொழிலாளர் ஊர்வலம் வருவர். முதலாளித்துவம் முன்பு தங்களைப் படுத்திய பாட்டினைப் பற்றியும் அதை அறவே ஒழித்து, அதன் கொடுமைகளை முழுவதும் அகற்றிய பொதுவுடைமைப் போராட்டத்தைப்பற்றியும் பேசுவர். அப்போராட்டம் தந்த விடுதலைக் கீதங்களை அந்நாட்டு மக்கள் வீதிகள்தோறும் பாடிக்கொண்டு செல்வார்கள். ஸ்டாலின் மாஸ்கோவிலே மேதினவிழாவில் மகிழ்ச்சியோடு கலந்திருப்பார்.

மாஸ்கோவிலே, ஜெர்மனியிலே, பிரான்ஸிலே, அமெரிக்காவிலே கொண்டாடும் இவ் விழாவை இச் சென்னையிலேயும் நாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின ராகிய நாம் கொண்டாடுகிறோம். நாம் மட்டுமல்ல; திருவல்லிக்கேணிக் கடற்கரையில் மட்டுமல்ல; வேறு வேறு இடங்களில் வேறு வேறு தலைவர்கள், பேச்சாளர்கள் இதே நாளில் கூடிப் பேசுகிறார்கள். இங்கே நான், இன்னொரு கூட்டத்தில் ஏ. கே. கோபாலன்! இங்கே திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், அங்கே கம்யூனிஸ்ட் தோழர்கள் சார்பில்!

## ஆண்டிற்கோர் கவிஞர்!

ஒவ்வோர் ஆண்டிலும் நாம் கூடும் மேதினவிழாக் கூட்டத்தில் ஒவ்வொரு கவிஞர் காட்சியளிக்கிறார். சென்ற ஆண்டு ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா நம்மிடையே கலந்துகொண்டிருந்தார். அவர் ஒரு புரட்சிக் கவிஞர். இன்றும் நம்மிடையே ஒரு கவிஞர் இருக்கிறார். சீர்திருத்த நோக்கத்தோடு புரட்சிக் கவிதைகளை நாட்டுக்கு நல்கிவரும் உடுமலை நாராயண கவி அவர்கள் நம்மிடையே இருப்பது பற்றி நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். தெள்ளத் தெளிய, பகுத்தறிவுப்போதனைகளைத் தந்துவரும் உடுமலை நாராயண கவி அவர்களைப் பாராட்டுகிறேன்.

இன்னும் பல கவிஞர்களை உலகுக்கு நாம் காணிக்கையாகத் தருவோம், தரக் காத்திருக்கிறோம்.

## பாட்டாளி மக்கள் திராவிடரே!

பாட்டாளி மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர் திராவிடர்தாம். வயலிலே ஏர் பிடித்து உழும் உழவுத் தொழிலாளி ஒரு திராவிடம்; இயந்திரங்களின் நடுவிலே விஞ்ஞான அற்புதத்தோடு வேலை செய்பவன் திராவிடன்; தறிக்குழியிலே, தாய் நூல் நூற்றுக்கொடுக்க, தனயன் அறுந்துபோன நூலைச் சரிப்படுத்த, அருமையான மனைவி தார் சுற்றித்தர, இங்ஙனம் குடும்பத்துடனே கும்பிக்காகப்

பாடுபட்டுழைக்கும் தறி நெசவாள அன்பன் திராவிடன் தான். கூலிவேலை செய்பவன் திராவிடன்; குப்பை கூட்டும் குப்பன் ஒரு திராவிடன்; மோட்டார் ஓட்டுபவன் ஒரு திராவிடன்; மூட்டை சுமப்பவன் திராவிடன். வண்டியிழுப்பவன் திராவிடன்; வாழ வீடுகட்டித் தருபவனும் திராவிடனே. காடுகளிலே கட்டை பிளப்பவன் திராவிடன்; பிளந்த கட்டைகளைச் சீவி இழைத்துக் கட்டிலும் நாற்காலியும் மேசையும் செய்து தருபவன் திராவிடன். திராவிடர் செய்யும் தொழில்கள் இவை மட்டுமன்று, இன்னும் பல. ஒன்றல்ல, இரண்டல்ல—ஓராயிரம்! திராவிடரல்லாதார் செய்யமாட்டார் அவற்றை!

நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர் தொழில் செய்யும் பாட்டாளிகள்; அந்த நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேரும் திராவிடர்தாம் என்று சொன்னால், அனைவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். அத்தகைய திராவிடர்களின் விடுதலைக்காகவே, தொழிலாளர் இனத்தின் விடுதலைக்காகவே திராவிட இயக்கம் பணியாற்றி வருகிறது

இரவென்றும் பகலென்றும் பாராமல் ஓயாது உழைக்கும் திராவிடன் குறைவான கூலியோடு எத்தனை நாட்களுக்கு வாளா வேலைசெய்து வரமுடியும் என்ற கேள்வியைத் திராவிடர் இயக்கம் பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறது.

## ஆலயங்கள் ஆயிரம்! அன்னக்காவடிகள் லக்கம்!

நாட்டிலே நல்ல நல்ல தேவாலயங்கள் பல இருக்க தரித்திரம் தலைவிரித்து ஆடுவானேன்? பாரதமும், பகவத் கீதையும் இருக்க, பக்தர்கள் அல்லலுறுவானேன், அவதிப்படுவானேன்?

நாட்டிலே ஏராளமான பஜனை மடங்களுண்டு. ஆனாலும் மக்களுக்குப் பசி தீர உணவு கிடைப்பதில்லை. வற்றாத ஜீவநதிகள் இருந்தும், வாழ்க்கையில் மக்கள் வெற்றிபெற முடிவதில்லை. கொஞ்சம் கனமான சாமானைத்

தூக்கவேண்டுமென்றால் கூட நாம், 'ராமா, ராமா' என்று சொல்லிக்கொண்டுதான் தூக்குகிறோம். முதலாளி கூலி குறைவாகத் தந்தால், அவனை நோகாமல், ஆண்டவனையே நோக்கி, "ஆண்டவனே, உனக்குக் கண்ணில்லையா? ஏழை படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ, இது தகுமோ, இது முறையோ?" என்று சொல்லி இறைவனைப் பார்த்து மக்கள் ஏங்குவதைப் பார்க்கிறோம். இந்த விசித்திர நிலையின் மர்மம் என்ன என்ற கேள்வியைத் திராவிடர் இயக்கம்தான் அநேக ஆண்டுகளாகக் கேட்டுவருகிறது.

கடவுளைப் பற்றிக் கவலைப்படுகிற நாடு நம் நாடு. ஒரு கடவுளைப்பற்றிக்கூட அல்ல, பல கடவுள்களைப் பற்றி, கடவுள்களின் குடும்பங்களைப்பற்றி, கடவுள்களின் சமூகம் பற்றி! ஆனால் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத நாடு, இயேசுவைப்பற்றி எண்ணாத நாடு என்றழைக்கப்படும் ரஷ்யாவிலே, மக்களைப் பிணிகளோ, பஞ்சமோ, வேலையில்லாத் திண்டாட்டமோ அணுகுவதில்லை. இதற்குக் காரணமென்ன? ஏன் இந்த ஏறுமாறான நிலை? இதைத்தான் மேதின விழாவில் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று திராவிட இயக்கம் கேட்கிறது. இந்தக் கேள்வியை வேறு எந்த இயக்கமும் கேட்கவில்லை; கேட்க எண்ணவும் இல்லை; கேட்பார்கள் என்று நாம் கனவு காணவும் முடியாது.

நாம் கேட்கிறோம்; கேட்பது மட்டுமல்ல; கேள்விக்கான விளக்கத்தையும் நம்மால் சுட்டிக்காட்ட முடியும், வரலாற்றுக் கண்கொண்டு, எதையும் ஒப்பிட்டறியும் பகுத்தறிவுக் கண்கொண்டு. இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ உள்ளன கவனிப்பாரற்று, நம் நாட்டில். மேனாட்டவர் தம் நாடுகளில் இத்தகைய இடங்களைக் கண்டால், எவ்வளவோ 'ஓய்விடங்களை' உண்டாக்கிப் பொழுதுபோக்கிற்கும், உல்லாசத்திற்கும், இயற்கையழகைப் பருகுவதற்கும், தூய காற்றை உட்கொள்வதற்கும் பயன்படுத்திக்கொள்வர்; பயன்படுத்தி இருப்பர். ஆனால் இங்கோ இவ்வளவு அழகு இருந்தும், ஆர்வந்தரும் சக்தி இருந்தும், கலை உள்ளத்தைத் தரும் திறமிருந்தும் யாவும்

கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. பருவமும் அழகும் இருந்தும் மணாளன் இல்லாத காரணத்தால் வாடும் விதவை போல, முழுமதியாயிருந்தும் முகில்கள் மறைத்துக்கொள்ள அது ஒளியிழந்து இருட்டைத் தருவதுபோல, நாடு அவதியுறுகிறது.

இன்னும் ஒரு எடுத்துக்காட்டுத் தருகிறோம், நம் நாட்டு—பிறநாட்டு நிலைகளை விளக்கிட. போர்முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. பாரத தேசம் சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டுகளாகின்றன. போருக்கு முன் இருந்த நிலைமைக்கு வந்துவிட்டோம் என்று கூறமுடியுமா? அல்லது போர்கால நிலையிலே இருந்ததுபோலாவது இருக்கிறோமா? போர் முடிந்து வெள்ளையன் வெளியேறும் போது அவன் நம் ஆளவந்தார் கையில் கொடுத்துச்சென்ற பாரத தேசத்தின் நிலையாவது உண்டா? இல்லை என்று தானே கூறவேண்டும்? இத்தனைக்கும் நாம் போரில் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை. பிரான்ஸளவு, ஜெர்மனியளவு, பிரிட்டனளவுகூடப் போர் நம் நாட்டைத் தாக்கவில்லை. போரின் காரணமாக நமக்குற்ற தீங்கு பொருளாதாரச் சீர் குலைவு மட்டுமே—இது உலக முழுவதிலும் போரில் ஈடு படாத நாடுகளுக்கு இருந்துவந்த தீமையேயன்றி வேறல்ல. ஆனால் போரில் மற்ற எந்த நாடுகளையும்விட மிகுதியாகப் பாதிக்கப்பட்ட நாடு ரஷ்யா என்பதை எல்லோரும் அறிவார்கள். நீப்பர் அணைக்கட்டு ரஷ்யாவின் செல்வம். உலகத்தின் மாபெரும் தொழில்வளத்துக்குக் காரணமான அணைக்கட்டு அது—அதை ஜெர்மானியர் உடைத்தெறிந்தார்கள். ஆனால் போர்முடிந்து சில ஆண்டுகளுக்குள் போரில் அதிகமாக அடிபட்டுத் தளர்ச்சியுற்ற ரஷ்யா அதை மீண்டும் கட்டிவிட்டது. முன்போலவே நீப்பர் அணைக்கட்டு இன்று இலங்குவதைக் காணலாம்.

## விளக்கம் இதோ!

இது அங்கு, ரஷ்யாவில்! ஆனால் இங்கே, சென்னையில் என்ன காண்கிறோம்?

இந்தச் சென்னைக் கடற்கரையின் ஓரத்திலே, போர் முடிந்த பின்னும் பல நாட்களாக, எவரும் உடைத்துப் பார்க்காத, உள்ளே என்ன உள்ளதுஎன்று எவரும் அறியாத, அறிய முனையாத நிலையில் பல மூடிய பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. என்னவென்று உணரவோ, அதைத் திறந்து பார்க்கவேண்டுமென்ற எண்ணமோ எவருக்கும் எழாதது மட்டுமல்ல, அதை அப்புறப்படுத்தும் முயற்சியும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில் டில்லி கேட்டதாம், "கடற்கரை அருகே பிரிக்காத பெட்டிகள் இருக்கின்றனவாமே?" என்று. டில்லி கேட்க, சென்னை "ஆமாம், இருக்கிறது. இன்னும் பிரிக்கவில்லை" என்று சொல்லிற்றும். 'அதைப் பிரித்துப்பார்' என்று சொன்னபின்தான் சென்னை பிரித்துப் பார்த்ததாம். அது அவ்வளவும் 'ஜீப்' கார்களின் 'ஸ்பேர்—பார்ட்ஸ்' களாக இருந்தனவாம்! எப்படி இருக்கிறது, நம் அரசாங்கத்தின் நிர்வாகம், பார்த்தீர்களா?

சென்னை சிந்திக்காது, டில்லி கூறிவிட்டால்; டில்லி சிந்திக்காது, யாரோ தூண்டாவிட்டால்!

சென்னை இங்கு! ரஷ்யா அங்கு! இந்த உதாரணம் தராதா விளக்கம், இருட்டறையில் குருடன் நடந்து சென்றால் எப்படி இருக்குமோ அப்படித்தானிருக்கிறது இன்றைய ஆட்சி என்பதற்கு?

## உண்டு, இல்லை!

நம் நாட்டில் இயற்கை வளம், இயற்கை எழில் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்று சொன்னேன். இயற்கை வளமிருந்தும் இந்த நாட்டிலே இருக்கிற பஞ்சம், பற்றாக்குறை போல எந்த நாட்டிலும் இல்லை! இந்த நாட்டிலே உள்ள உழைப்பாளிகளைப்போல வேறு எந்த நாட்டிலும் உழைப்பாளிகள் இல்லை. இந்த நாட்டிலே உழைப்பாளிகளுக்கு உழைப்பும் கிடைப்பதில்லை. உழைப்பவர்களும் உழைத்த உழைப்புக்குத் தக்க ஊதியமும் காணுவதில்லை. மற்ற நாடுகளைவிட இங்கு உழைப்புக்குக் குறைவான பலனே கிடைக்கிறது.

இயற்கை எழில் உண்டு, ஆனால் தொழில் வளமும் வாழ்க்கை வளமும் இல்லை. உழைப்பு உண்டு, ஆனால் பலன் இல்லை. திறமையுண்டு, ஆனால் வெற்றி இல்லை. இப்படியாக "உண்டு, ஆனால் இல்லை; உண்டு, ஆனல் இல்லை." என்ற பட்டியலைத்தான் நாம் ஓய்வொழிவில்லாமல் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் நாம் இறுதியாக மொத்தத்தில் விசித்திரம், வேதனை ஆகியவைகளைத்தான் விளைவுகளாகக் காண நேரிடுகிறது. விசித்திரம் வியப்பை மட்டும் ஊட்டவில்லை; வேதனையைப் பெருக்குகிறது. வேதனை வியப்புக்கு விளக்கம் தரவில்லை; மாறாக அதை வளர்க்கிறது. மேன்மேலும் வியப்பு வேதனையை வார்த்து அதனை வளர்க்கவே காண்கிறோம்.

## திராவிட இயக்கம் தொழிலாளிகள் மூச்சு!

தொழிலாளத் தோழர்களின் தொல்லைகளைப் பற்றி சோஷலிஸ்டுகள் ஓய்வு நேரத்திலே விசாரிப்பார்கள். கம்யூனிஸ்டுத் தோழர்கள் தொழிலாளர்களின் பிரச்னையைப் பற்றிப் பேசுகிறார்களென்றால், அது அவர்களுக்கு இரண்டாம் தரமானது தான். காங்கிரஸ் கட்சியோவெனில் தேர்தல் காலங்களில்தான் தொழிலாளர்களைப் பற்றி நினைக்கும். திராவிட இயக்கம் ஒன்றே அவர்கள் நலனில், வாழ்வில் ஓயாது கவலைகொண்டு கவனம் செலுத்தி வருகிறது.

கம்யூனிஸ்டு—சோஷலிஸ்டுத் தோழர்கள் தொழிற்சாலையிலிருந்து அதன் வாசற்படியைத் தாண்டும்வரை தான் தொழிலாளர்களின் வாழ்வில் கிளர்ச்சிசெய்ய முடிகிறது. அக்கிளர்ச்சியின் பயனாய் அவனுக்குப் பத்தணாக் கூலி, பன்னிரண்டு அணுவாக உயர்ந்தது, உயர்த்தப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். அக்கூலியை வாங்கிக் கொண்டு, தொழிலாளி வாசற்படி தாண்டி வெளியே வருகிறான். வழியிலே ... ஆலமரத்துப் பிள்ளையாருக்கு இரண்டு அணுவுக்குக் கற்பூரம் வாங்கிக் கடவுளை வழிபடுவான். ஏனென்றால், "ஆண்டவனை நம்பு, அல்லல்கள்

தீரும்; ஆலவாய் அப்பனை நம்பு, அய்யன் உன்னைக் கைவிடமாட்டான்" என்ற நல்லுரைகளையே அவன் கேட்டிருக்கிறான். அத்தகைய தொழிலாளியைப் பார்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் கூறும், பகுத்தறிவுக் குகந்த அறிவுரையை!

"இரவென்றும், பகலென்றும் பாராது உழைத்து, உழைத்து உருக்குலைந்த பாட்டாளித் தோழனே! இந்த இரண்டணா உயர்வுக்காக எத்தனை தடியடிகளைத் தாங்கியிருப்பாய்! எத்தனையோ தொல்லைகளுக்கிடையே, அல்லல்களின் எல்லையிலே பெற்ற இரண்டணாவைக் கொண்டு கற்பூரம் வாங்கிக் கொளுத்தினால் ஒரு அப்பனும் ஏற்கமாட்டாரே; ஆலவாய் அப்பன் எப்படி ஏற்பார்?

"ஆலமரத்துப் பிள்ளையாருக்குக் கற்பூரம் வாங்கிக் கொளுத்தும் பணத்தைக் கொண்டு, ஆரஞ்சுப் பழம் என்பதையே கண்டிராத உன் அருஞ்செல்வனுக்கு ஆரஞ்சுப்பழம் வாங்கிக்கொடு; பிள்ளையாருக்குத் தேங்காய் பழம் வாங்குவதற்குப் பதிலாக, உன் பிள்ளை படிப்பதற்குத் தேவையான கற்பலகை, புத்தகம் ஆகியவை வாங்கிக்கொடு" என்று நாம் அறிவுரைகூறுவோம்.

## நல்வழி காட்டும் தோழன்!

தொழிலாளர்கள் கூலி உயர்வோடு மற்ற கட்சிகள் நின்று விடுகின்றன. அந்தக் கூலியை அவன் எப்படிச் செலவு செய்கிறான்; கூலி உயர்வு பெறுவதால் அவன் வாழ்வு வளம் பெறுகிறதா, அல்லது அதன் மூலம் வாழ்வுக்குக் கேடான நச்சுச் செலவுகள் பெருகுகின்றனவா என்பன பற்றி அவை கவலைப்படவோ, சிந்திக்கவோ, அவ்வகையில் தொழிலாளருக்கு அறிவுரை கூறவோ, இடித்துரைக்கவோ, அவனுக்காக அத்துறையில் போராடவோ செய்வதில்லை. ஆனால் திராவிட இயக்கம் — திராவிட முன்னேற்றக் கழகம் அவன் சம்பளம் வாங்கும் தொழிற்சாலையிலிருந்து, அதன் வாசற்படி கடந்து, அவன் வீடு வரையில் உடன்வந்து உதவி, அவன் நலங்களைக் காக்க முனை

கிறது. குடும்ப வாழ்வில் அவனுடனிருந்து உதவி புரிகிறது. அவனுடன், அவன் மனைவி மக்களுடன் திராவிட முன்னேற்றக் கழகமும், அது தரும் அறிவுரையும், அனுபவ அறிவும் கோயில், குளத்திற்குச் செல்லுகிறது. நாடகக் கொட்டகை, படக்காட்சி அரங்குகளுக்குச் செல்கிறது. அவன் பிள்ளைகளுடன் பள்ளிக்குச் செல்கிறது. எங்கும், எப்போதும் அது அவன் வாழ்க்கைக்கு உற்ற வழிகாட்டியாய், அவன் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் ஒப்பற்ற நண்பனாய் இருக்கிறது.

ஓய்வில்லா உழைப்பு, அலைச்சல் ஆகியவற்றின் காரணமாக, தொழிலாளி இரவிலே கனவு காண்பான். கனவில் ஐந்து தலை படைத்த நாகத்தின் மீது ஆண்டவன் தோன்றினார் என்று அவன் தன் மனைவியிடம் கூறுவான். உடனே அம்மையார் "ஓ, அதுவா, ஐந்து மாதங்களுக்கு முன் உயிர்நீத்த நமது குழந்தைதான் கனவு ரூபத்திலே வந்திருக்கிறது. பெரியபாளையத்து அம்மாளுக்கு, கோழியறுத்துக் காவு கொடுக்க வேண்டும்" என்று கூறுவார். அந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், "அப்பா, தொழிலாளத் தோழனே, கனவு ஏற்படுவதற்குக் காரணம் அஜீரணம், அதிக உழைப்பு, அதனால் ஏற்படும் அயர்ச்சி, தெளிவில்லா உள்ளம், அதன் அதிர்ச்சி ஆகியவைதான். ஆகவே தோழனே, கவலைப்படாதே. சற்று நல்ல ஓய்வு எடுத்துக்கொள். பெரியபாளையத்து அம்மன் காவுக்குச் செலவு செய்யும் தொகையைக் கொண்டு பாலும் பழமும் வாங்கிச் சாப்பிடு. அதில் மனைவிக்கும் குழந்தைக்கும் கொஞ்சம் கொடுத்தால்கூடக் கேடில்லை. தேவைப்பட்டால் ஏதாவது நல்ல டானிக் வாங்கிச் சாப்பிடு. அல்லது டாக்டரைப் போய்ப்பார்"; என்று கூறும்.

## உள்ளம் நிறை நச்சுப் பொடிகள்!

ஆலைத் தொழிலாளி சகுனத்திலே நம்பிக்கை வைத்திருப்பது விசித்திரமானது. அமெரிக்காவிலிருக்கும் தொழிலாளிகள் சகுனம் பார்ப்பதில்லை! ரஷ்யாவிலே உள்ள

தொழிலாளர்கள் சகுனம் என்றால் என்ன என்று கேட்பார்கள். சகுனம் பாராத மேலைநாட்டுத் தொழிலாளர்கள், கடிகாரத்தைக் கவனித்து நடக்கிற மேனாட்டினர், முன்னேற்றத்தின் உச்சியிலே இருக்கிறார்கள். நம் நாட்டுத் தொழிலாளர்கள் கடிகாரத்திற்கு மதிப்புத் தருவதில்லை. கடிகாரம் வாங்கப் பணமில்லாமலே பஞ்சாங்கம் வாங்கி வைத்துக்கொண்டு இராகுகாலம் பார்க்கிறார்கள்; சகுனம் பார்க்கிறார்கள்; இன்னும் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள்! ஆதியிலேயிருந்து, தலைமுறை தலைமுறையாகத் தொழிலாளரின் உள்ளத்திலே, வாழ்விலே தூவப்பட்ட இந்த மாதிரியான நச்சுப் பொடிகளைத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் பறக்கடிக்கிறது. அதன் காற்றுத்தான் அவற்றை அகற்றுகிறது. அதன் தென்றல் மணம் தான் அவற்றின் நச்சு வாடையை ஒழிக்க முடியும். இது மட்டுமா? இந்த நாட்டிலே தொழிலாளரின் உள்ளத்திலே நடமாடும் எண்ணங்கள், கருத்துக்கள் மாறுபடாமல் அப்படியே இருந்து வர அனுமதி தந்து விட்டு, மூடத்தனம், அறியாமை, குருட்டு நம்பிக்கை இன்னபிற வளர வழி வகுத்து விட்டு, பொருளாதார முன்னேற்றம், அரசியல் உரிமை, தொழில்ளர் நலன் காக்கும் பாதுகாப்புகள் அளித்துத் தொழிலாளர் என்ன பயன் காணமுடியும்?

**கள்ளன் — காமுகன் செயல்!**

வெளியிலே கொலை, களவு செய்த கைதி, கன்னியரின் கற்பைச் சூறையாடி, கற்பிழந்த அக்காரிகையர் நல்வாழ்வைச் சீரழித்த கைதி, சிறைக்குள்ளே இருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள். கைதிகளுள் இந்த ரகம் மட்டுமல்ல, இதற்கும் மட்ட ரகங்களும் உண்டு. சிறைக்கூடத்துக்குள்ளே அதிகாரிகள் அவர்களுக்குக் கொடுக்கும் சிறிதளவு உரிமையையும், சிறிதளவு ஓய்வு நேரத்தையும்கூட அவர்கள் எதற்குப் பயன்படுத்துவார்கள் என்று நினைக்கிறீர்கள்? சிறையதிகாரிகள் அனுமதித்தால் அவர்களும் குளித்துவிட்டு நெற்றியிலே விபூதி பூசிக்

கொண்டு, அப்படியே குங்குமம் கிடைத்தால் பொட்டும் இட்டுக்கொண்டு, கடவுளை விழுந்து விழுந்து தொழுவார்கள். கன்னம் வைத்தவன் சிறையிலே கன்னத்திலே போட்டுக் கொள்வான். வெளியிலே கன்னியரைக் கற்பழித்த கயவன் சிறையிலே சூரிய பகவானைப் பார்த்து வேண்டுதல் செய் வான். நெடுநாட்களாக நாட்டில், எல்லோரது உள்ளத் திலும், தொழிலாளர் உள்ளத்திலும், சிறைக் கைதியின் உள்ளத்திலும் கூட இந்தத் தீச்சிந்து, இழிநிலை பரணி பாடிக் கொண்டிருக்கிறது. இது ஏன் என்று சிலப்பதிகாரத் தமிழர் களைக் கேட்கிறேன்; மறத் தமிழர்களைக் கேட்கிறேன்.

மாயஉலகில் ரிசர்வ் பாங்க்!

வாழ்வாவது மாயம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் அவ்வாறு நீண்ட நாட்களாக 'மகான்'கள் கூறி அந்த மயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அந்த 'மாயம்' எந்த அளவுக்கு மக்களிடையே மயக்கத்தையும், தயக்கத் தையும் உண்டாக்கியிருக்கிறது என்றால், நாற்பது வயது சென்ற ஒருவரைப் பார்த்து, "என்ன ஐயா! சௌக்கியமா யிருக்கிறீர்களா?" என்று கேட்டால், "ஆம். சௌக்கியமா யிருக்கிறேன்" என்று சொல்லமாட்டார். "ஏதோ, இருக் கிறேன்" என்று மேல் ஸ்தாயியில் இருந்தவர் இறங்கி வந்து கீழ் ஸ்தாயியில் சொல்லுவார். சொல்லும் தொனி யிலே சுரங் குறைந்திருக்கும் என்பதோடு மட்டுமல்ல. பேச்சுடனே பெருமூச்சும் கலந்து வரும். அந்தக் கலப்பு, கேட்டவனுக்கே பயத்தையும் கவலையையும் உண்டாக்கி விடும். ஆங்கிலத்திலே 'எப்படி இருக்கிறாய்?' என்ற பொருளில் 'ஹௌ டு யு டு' (How do you do?) என்று கேட்டால், உடனே 'மிக நன்றாயிருக்கிறேன்' என்ற பொருளில் 'ஓ. கே.' (O. K.) என்று சொல்லுகிறார்கள். அதனால்தான் அவர்கள் வாழ்கிறார்கள்! நாம் 'ஏதோ', இருக்கிறோம்!

இதனால்தான் நாம் 'வாழ்வு நிலையானது, வாழ்க்கை வாழ்வதற்கே, சாவதற்கல்ல' என்று பன்முறை, அடிக்கடி

வற்புறுத்திச் சொல்லி வருகிறோம். 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்', 'பாழ்போவது பிறவித் துயர்' என்றும்,

"காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணுப் பாண்டம் ஓடடா!"

என்றும் பாடுகின்றவன் இரவிலே 'கதவைச் சாத்திப் பூட்டடா' என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

உலகம் என்பது மாயை என்றால், கதவு ஏன், பூட்டுத் தாழ்ப்பாள்கள் ஏன்? உலகம் என்பது மாயை என்றால் ரிஸர்வ் பாங்கு ஏன், இம்பீரியல் பாங்கு ஏன்? உலகம் மாயை என்றால், திபேத் நாட்டை யார் ஆண்டாலென்ன, காஷ்மீரை யார் கட்டிக் காத்தாலென்ன? இந்த உலகம் மாயை என்றால் மாடமாளிகைகள் ஏன்? வாழ்க்கை மாயம் என்பதை இந்த மாய வாழ்விலே, நிலையற்ற வாழ்விலே நிலை நாட்டக் கூட கோபுரங்கள், வெள்ளி வாகனங்கள், வைரக் கிரீடங்கள், மாணிக்க மூக்குத்திகள் ஏன்? மாய வாழ்விலே உழைப்பவன் உருக்குலைய உழையாதவன் உல்லாசபுரியிலே உலவும் மாயம் ஏன்?

உலகத்தின் நிலை இப்படி இருக்கும்போது 'வாழ்வு எப்படிப் பொய்யாகும், எப்படிப் பொய்யாகும்?' என்ற வினாவை எழுப்பி, எண்ணற்ற எண்ண அலைகளைத் தொழிலாளிகளின் உள்ளத்திலே உண்டுபண்ணுவதே திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் தனித் தொண்டு.

## எது மாயை?

உலகம் மாயம் இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனால் உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது. உழைப்பவன் உழைப்பின் பெருமையை உணரவேண்டும்; உல்லாசத்தின் ஊற்று, செல்வத்தின் பிறப்பிடம் எங்கே இருக்கிறது என்பதை அறியவேண்டும்.

உருண்டோடுகின்ற ரயிலை ஓட்டுபவன் யார்? தொழிலாளி! வானத்திலே ஒய்யாரமாகப் பறக்கும் விமானத்தை ஓட்டுபவன் யார்? தொழிலாளி! இழையை நூற்று நல்லாடை நெய்பவன் யார்? தொழிலாளி! இரும்பைக் காய்ச்சி உருக்குபவன், இயந்திரங்களை வகுப்பவன் யார்? தொழிலாளி!

மிராசுதார்களின் மேனுமினுக்கி வாழ்க்கைக்கான பொருள்களை உருவாக்குகிறவன் தொழிலாளி. விஞ்ஞானத்தின் அற்புதங்களிடையே, உயிரை ஆபத்துக்குள்ளாக்கி விளையாடுபவனும் தொழிலாளிதான்.

கடலில் மூழ்கி முத்து எடுப்பவன் தொழிலாளி; உழுது நன்செய் பயிரிடுபவன் தொழிலாளி. அந்தத் தொழிலாளி, அந்தத் தொழிலாளி இனம் மகிழ்ந்து கொண்டாடும் திருநாள்தான் இந்த மேதினம்.

## நம் வீரத்தொண்டு!

வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம் என்று நம்பித் தொழிலாளர் வாழ முடியாது, வாழக் கூடாது. பாரெங்கும் பல்கிப் பெருகிவரும் தொழிலாளர் இனம் பகுத்தறிவுடன் உலவவேண்டும் என்பதற்காகவே திராவிட இயக்கம் நாட்டில் நடமாடுகிறது. இதற்காகவே கல்லடி பட்டுக்கொண்டும், சொல்லடி தாங்கிக்கொண்டும், வல்லடி வழக்குகளுக்கு ஆளாகிக்கொண்டும், வம்பர் தூற்றுதலுக்கு இரையாகிக்கொண்டும் எங்கள் பிரச்சாரத்தை நெடுநாட்களாகச் செய்து வருகிறோம். கல்லடி சொல்லடி மட்டுமல்ல; பலர் மனக்கசப்பையும் பகைமையையும் தாங்கிக்கொண்டு, கொலைகாரர் சதியையும், சிறைவாழ்வையும் தூக்குமேடையையும் ஏற்று, தமிழகமெங்கும் அறிவுப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார்கள்—இன்னும் செய்துகொண்டு வருகிறார்கள் நம் திராவிட இயக்கத் தோழர்கள். ஒருபுறம் போலீஸார் எதிர்ப்புக்கிடையே, மறுபுறம் மடாதிபதிகளின் எதிர்ப்புக்கிடையே; முதலாளிகள், மிட்டாமிராசு ஜமீன்களின் சலசலப்பு, சதி, சூழ்ச்சி,

புறக்கணிப்பு இவைகள் ஒருபுறம் எதிர்ப்பை எழுப்ப, ஜரிகைக் குல்லாய்கள் ஏளனப் புன்னகையைத் தூவ— அவையெல்லாம் தாண்டி, எதிர்ப்புகளையெல்லாம் வரவேற்பு களாகக் கொண்டு, கொஞ்சமும் சோர்வுபடாமல் கடந்த பல ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறோம்.

## ஆரிய மாயை

ஆனால் நாங்கள் இந்த அறிவுப் பிரசாரம் செய்யும் போது — தொழிலாளி இனத்தின் பொருளாதார வாழ்வை மட்டுமல்ல, சமூக வாழ்வையும் உயர்த்த, அவர்களிடையே புகுந்து அவர்களை அடிமைப்படுத்தியுள்ள ஜாதி பேத நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள், புராண சாஸ்திரப் பூச்சுக்கள், பழங்காலக் கற்பனைப் பூச்சாண்டிகள், மனுமாந் தாதாப் பேச்சுக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பஞ் சாங்கப் பல்லவிகள், குறி—சித்து—கோசார பலன்கள் ஆகிய வற்றின் நச்சுக் காற்றைப் போக்கப் பாடுபடும்போது— மற்ற கட்சித் தோழர்கள் என்ன செய்கிறார்கள்? தேசியப் பத்திரிகைகள் ஆரூடம், குறி, சோதிடம், நாட்பலன், வாரப்பலன் ஆராய்ச்சியில் முனைந்து மக்களிடம் இயற்கை யில் தேய்ந்து, தீய்ந்து போகத் தக்க மடமைகளைப் புதுப் பிக்க முனைகின்றன. இவற்றின் பயனை நுகர எண்ணங் கொண்ட பெருத்த முதலாளித்துவ முதலைகள் இப் பத்திரிகைகளை ஒவ்வொன்றாக வாங்கிச்சேர்த்து, முதலாளித் துவத்திற்கும் ஆரியத்திற்கும் அசைக்க முடியாத அணை எழுப்பி, நீர் தேக்கி, நவீன நாகரிக மடமையை வளர்க்கின் றன. சுயராஜ்ய அரசாங்கமோ முன் எந்த அரசாங்கமும், வெள்ளையர் அரசாங்கம் கூட வளையாத அளவு, இந்த முத லாளிகளுக்கும் ஆரியத்திற்கும் குனிந்து, வளைந்து கொடுக் கிறது. ஜாதி மத வகுப்புப் பேதமற்றதென்று பறை சாற்றிக்கொண்டு இவ்வரசாங்கம்—புத்தர் தம் தரும சக்க ரத்தைத் தன் கொடியில் தாங்கிய டில்லி அரசாங்கம்—சுய ராஜ்யம் பெறுவதற்கே நாள், நட்சத்திரம், இராகு வேளை, குளிகை காலம், அமிர்த—சித்த யோகம் பார்க்கவேண்டி

யிருந்தது. கப்பலுக்குத் தேங்காய் உடைத்து மந்திரம் சொல்லவேண்டியிருந்தது. கல்விக்குப் பணமில்லையென்று கைவிரித்துவிட்டு, பழைய கோயில்களைப் புதுப்பித்து, விக்கிரக பிரதிஷ்டைகள் செய்து, புதுக் கோயில் கட்ட லட்சக் கணக்கில் செலவிடுகிறது. மத ஆர்வத்தைக் கிளப்பி, மக்களைச் சுரண்டி ஆரியமும் தானும் கொழுக்க, வயிறு பெருக்க அரசாங்கம் கொண்டுள்ள ஆரிய மனப் பான்மைக்குத் திருப்பதி ஸ்பெஷல் பஸ் சர்வீஸ் ஒரு சான்று. பழய திருப்பதியும் பழனியும் போதாதென்று அது புது வடபழனிக்குக்கூட ஆக்கம் தரப் பாடுபடுகிறது.

## ஒரு தராசு! ஒரு டெலிபோன்!

ஆரியம் முற்காலங்களில் தர்ப்பையையும் முக்கோலை யும் வைத்துக்கொண்டு அறிவை அடக்கிச் செங்கோலைச் சாயவைத்தது. ஆனால் இன்று அதற்குச் செங்கோலை விட வலிமைவாய்ந்த தராசுக்கோலின் துணை கிடைத்திருக் கிறது. இந்த நாட்டை அடக்கியாளும் சக்திகள் இன்று வாளும் வில்லுமல்ல, துப்பாக்கிக் குண்டும் அணுக்குண்டுங் கூட அல்ல. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளையும், அணுக் குண்டுகளையும் விட வலிமைவாய்ந்த இரு சக்திகளை வட நாட்டு முதலாளி வைத்துக்கொண்டு இயக்குகிறான். அந்தச் சக்திகள் தராசும் டெலிபோனுமே!

பஞ்சாங்கமும் தர்ப்பையும் இன்றும் ஆட்டிப் படைக்கும் நாடு நம் நாடு! ஆனால் பஞ்சாங்கத்தையும் தர்ப்பையையும் விட வயிரம் வாய்ந்த தராசும் டெலி போனும் தாங்கிய ஆரிய-முதலாளித்துவம் ஆரியத்துக்குப் புதுச் சக்தி ஊட்டி மக்களுலகை ஆட்டிவைக்கின்றது. முதலாளித்துவ மேடைமீதிருந்து ஆரியம் வறுமை விதை களையும் மடமை விதைகளையும் பொதுமக்கள் வாழ்வில் நவீன சாதனங்களின் உதவிகொண்டு தொலைதூரம் பரப்பி முதலாளித்துவ ஆட்சியையும், ஆரிய ஆட்சியையும் ஒருங்கே வளர்க்க முடிகிறது.

## மனிதனும் மிருகமும்!

மனிதன் அறிவுடையவன், விலங்குகள் அறிவில்லாத தாழ்ந்த படியிலுள்ளவை என்று அடிக்கடி கூறுகிறோம். ஆனால் உரிமைகளைப் பற்றியமட்டில் விலங்குகள் நிலைதான் மனிதன் நிலையை விட, தொழிலாளர் நிலையை விட மேல் என்று கூறவேண்டியிருக்கிறது.

மனிதன் உணவு உண்கிறான். மிருகமும் உணவு உண்கிறது. மனிதன் காதல் புரிகிறான். மிருகமும் காதல் புரிகிறது. மக்களிலே, ஆணும் பெண்ணும் மருவுகின்றனர். விலங்குகளிலும் அப்படியே. மனிதன் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறான்; மிருகமும் பிரஜா உற்பத்தியில் ஈடுபடுகிறது. ஆனால் மிருகத்திற்குத் தேவைக்கேற்ற வசதி இருக்கிறது. மனிதனுக்கோ தேவைக்கேற்ற வசதியில்லை.

வாழ்விலே உரிமைகள் பல உண்டு. நாகரிக நாட்டிலே சகலருக்கும் வாழ வசதியிருக்கவேண்டும். ஆனால் இன்றைய நாகரிக ஆட்சியிலே தொழிலாளிகள் வாழ்வில் ஏற்றமில்லை. எடுத்துக் காட்டத்தக்க மாற்றமில்லை. பாட்டாளி நல்லாட்சியை நாடுகிறான்; ஆனால் அவனுக்குக் கிடைத்த ஆட்சி போரழிவினிடையே நீப்பர் அணைக்கட்டுத் திட்டம் வகுக்கும் மதியுள்ள, துணிவுள்ள, நல்ல நோக்கமுள்ள ஆட்சியன்று; அமைதிக் காலத்திலேயே ஆறவுன்சு தரச் சிணுங்கும் ஆட்சி! ஆனால் ஆலவாய் அப்பனுக்கும் ஆண்டவனுக்கும் அளந்துகொட்ட, சிலை அமைக்க, சிங்கார வாழ்வினருக்குச் செல்வமாளிகையும், சீரான நகரங்களையும் அமைத்துக்கொடுக்கத் துடித்து முன்வரும் ஆட்சியே கிடைத்திருக்கிறது. அவர்கள் ஆதரவு தேடுவது தொழிலாளியிடம்; ஆதரவு வேண்டுவது தொழிலாளி இனத்திடம். ஆனால் அழைப்பது முதலாளியை; ஆதரவளித்து அரவணைத்துக்கொள்வது முதலாளிகளின் குறுகிய தன்னலக் கும்பலை! அவர்கள் சுமக்கமாட்டாத வரிப்பளுவைச் சுமத்துவது திராவிடப் பொதுமக்களிடம்;

அவ்வரியின் விளைவாக வரும் உரிமை, மதிப்பு, வசதிகள் யாவும் கொடுக்கப்படுவது ஆரிய அக்கிரகாரத்துக்கும், அதனை ஆதரிக்கும் போக்கும், அக்கிரகாரத்திற்கு அடி பணிந்து கொடுக்கும் நோக்கும் உடைய சிலருக்கு மட்டுமே.

## வேதனை! வெட்கம்!

சென்ற மாதம் பல ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தேன். இராமநாதபுரத்தில் ஆடு மாடுகளெல்லாம் எலும்பும் தோலுமாய்க் காணப்படுகின்றன. அவைகளெல்லாம் இடுகாட்டுக்குப் போகும் நிலையில் தோன்றுகின்றன. இறைச்சிக் கடைகள் கூட அவற்றை வரவேற்க முடியாது! வயல்களெல்லாம் வரண்டு வெடித்துக் கிடக்கின்றன. மக்களிடம் அரிசி இல்லாத குறை, வேலை இல்லாத குறை, கையில் காசில்லாத குறை, உடலை மறைக்க ஆடை இல்லாத குறை, ஒதுங்க இடமில்லாத குறை யாவும் தாண்டவமாடுகின்றன. இத்தனையும் நீக்கவேண்டிய பொறுப்பு நம் சர்க்காருக்கு இருக்கிறது. இந்தக் கேவல நிலையைச் சர்க்கார் வளரவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர்கள் கையைத் தலையணையாகக் கொண்டு படுத்துறங்குகிறார்கள். அவர்கள் உழைப்பில் மண் விழுந்துவிட்டது. அவர்கள் துயரம் இன்னும் நீங்கிய பாடில்லை. அவர்கள் வாழ்வுதான் தேய்கின்றது. உயிர்கள் ஒவ்வொன்றாக, ஒன்றின் பின் ஒன்றாக, பிள்ளையின் பின்னால் தாய், தாயைத் தொடர்ந்து தந்தை என்று இந்த நாட்டிலிருந்து விடைபெற்றுச் செல்லும் நிலை நேர்ந்திருக்கிறது. நம் நாட்டில் பாட்டாளி மக்களின் துயரங்களைத் தீர்க்க நல்லாட்சி தேவை. எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இதற்கான கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும்.

## முதல் தாம்பூலம்!

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறுமுன் முதல் தாம்பூலத் தட்டு காங்கிரஸ்காரர்களிடம் தான்

வைக்கப்பட்டது. அதைக் காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் பேரால் மட்டுமன்றித் தேசத்தின் பேராலும் வாங்கிக் கொண்டார்கள். ஒரு கட்சியின் பேரால் வாங்கவில்லை, தேசக் கட்சிகள் எல்லாவற்றின் பெயராலும் வாங்கினர்கள். ஆனல் அவர்கள் எல்லாக் கட்சிகளையும் கலந்து தேசியக் கொடி அமைக்கவில்லை. தாமே அமைத்துக் கொண்டார்கள். அத்துடன் நிற்கவில்லை. தேசியக்கொடியையே தங்கள் கட்சிக் கொடியாக மக்கள் முன் காட்டி ஏமாற்றுகிருர்கள். அவர்களுக்குத் தாம்பூலம் வைத்தவர்கள் ஏகாதிபத்திய வாதிகள். தாம்பூலம் பெற்றவர்களும் ஏகாதிபத்தியவாதிய ளாகும் உரிமை பெற்றுவிட்டதாகவே எண்ணிக்கொண் டார்கள் போலும்!

உலக வரலாற்றைப் பார்த்தால் ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பது உங்களுக்கு நன்ருக விளங்கும். ஏகாதிபத்தியவாதிகள் ஒரு நாட்டைத் தங்கள் பொருளா தார வேட்டைக் காடாக்கி ஆதிக்கம் செலுத்துவதைத்தான் ஏகாதிபத்தியம் என்று கூறுகிருேம். சுரண்டப்படும் கடமையில் நாடுகள் இரண்டும் ஒன்ருகவே கருதப்படும். ஆனல் சுரண்டும் உரிமையில் அவை இரண்டாகவே இருக்கும். பிரிட்டிஷ் ஆட்சியில் பிரிட்டனும் இந்தியாவும் ஒரே சாம்ராஜ்யம், ஒரே வேட்டைக் காடு. ஆனல் வேட்டை யாடுபவர் பிரிட்டனில்; வேட்டைக் காடாக மட்டுமே இந்தியா இருந்தது. இன்றும் நிலைமை மாறவில்லை. நாடு களின் பெயரில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தென்னடு வேட்டைக் காடு. வடநாடு வேட்டையாடுபவர் உரிமை நிலம். சாம்ராஜ்யத்தின் பெயர் சொல்லி, ஆண்ட பழய ஏகாதிபத்தியவாதியிடமிருந்து தேசத்தின் பெயரைச் சொல்லி ஆளும் புதிய ஏகாதிபத்தியவாதி அதைப் பெற் றிருக்கிருன். பழய ஏகாதிபத்தியவாதி ஏழாயிரம் மைலுக் கப்பால் இருந்துகொண்டு வேட்டையாடினன். புதிய ஏகாதிபத்தியவாதி ஆயிரம், ஆயிரத்தைந்நூறு மைல்களுக் குள்ளாகவே தன் தாக்குதல் தளத்தை வைத்துக்கொண்டு ஆளுகிருன்!

## நேரு சர்க்காரும் நாமும்!

நேரு சர்க்கார் தபாலாபீசுகளைக் கொளுத்தியும், தந்திக் கம்பங்களை அறுத்தும், ஓடுகின்ற ரயிலைக் கவிழ்த்தும் சுதந்திரம் பெற்றதாகச் சொல்லட்டும். அப்படி நேரு சர்க்கார் சொன்னால் நான் சொல்கிறேன்; உருண்டோடு கின்ற ரயிலைக் கவிழ்ப்பது கடினமான காரியமல்ல. 1942-ல் ரயிலைக் கவிழ்த்ததுபோல் ரயிலைக் கவிழ்ப்பது இன்று நமக்குத் தெரியாத, அல்லது முடியாத காரியமல்ல. நமக்குத் தந்திக்கம்பிகளை அறுக்கத் தெரியாதா? நன்றாகத் தெரியும். ஆனால் இத்தகைய அழிவுச் சக்திகளிலே நமக்கு நம்பிக்கையில்லை என்பதைப் பல்வேறு இடங் களிலே ஒளிவு மறைவு இன்றிச் சொல்லியிருக்கிறோம். அழிவுச் சக்தியிலே விருப்பமில்லாத எங்களைச் சர்க்கார் பயன்படுத்தினால், ஆக்க சக்திக்கு வழிகோலலாம்.

தந்திக் கம்பிகளை அறுக்க 'டபிள்பாரல் கன்'னா தேவை? இருட்டிலே நடக்கக்கூடிய பழக்கம், இருட்டிலே செல்லும் பொழுது இடுப்பிலே ஒரு சிறு பேனாக்கத்தி, கையிலே ஒரு சிறு சுத்தி, நெஞ்சிலே கொஞ்சம் துணிவு, போலீஸ்காரருக்குக் கொஞ்சம் ஞாபக மறதி உண்டுபண்ணும் திறம்—இவ்வளவு போதுமே! இதுபோன்ற கீழ்த்தர மான பலாத்காரச் செயல்களினால் நாட்டின் நிலையை எப்படி உயர்த்த முடியும்? மக்களின் ஒழுக்கப் பண்பைத்தான் இதனால் கெடுக்க முடியும்.

சுதந்திரத்தைப் போராடிப் பெற்ற நாடுகள் பாரத தேசம் மட்டுமல்ல, எத்தனை எத்தனையோ நாடுகள்! ஆனால் கைராட்டை சுற்றாமல், பல குமரன்களைச் சாகடிக்காமல், பல பகவத்சிங்குகளைத் தூக்குமேடைக்கு அனுப்பாமல், தடியடி படாமல் இலங்கை சுதந்திரம் பெற்றிருக்கிறது; பாகிஸ்தான் சுதந்திரம் பெற்றிருக்கிறது; அமெரிக்கா, பிலிப்பைன், சிரியா, மலாயா, இஸ்ரேல் முதலிய நாடுகள் சுயராஜ்யம் பெற்றிருக்கின்றன. உலக அரங்கில் அவற்றின் பிரதிநிதிகளும், நேருவுடனும் ஸ்டாலின் ட்ரூமனுடனும்

சரிசமமாகத்தான் வீற்றிருக்கிறார்கள். இந்தப் பலாத்காரங்களைச் செய்யாததினால் அவர்கள் அந்தஸ்துக் குறைந்துவிடவில்லை. அதுமட்டுமல்ல. இந்தப் பலாத்காரங்களைச் செய்யாத நாடுகளில், உழைப்பவர்களுக்குக் குறை இல்லை. பஞ்சமில்லை. பட்டினியில்லை. இந்தியாவுடனேயே சுதந்திரம் பெற்ற பாகிஸ்தான் நமக்கு உணவு அனுப்ப முடிகிறது. நமக்குப் பின் விடுதலை பெற்ற இலங்கை, பர்மா இன்ன பிற சுண்டைக்காய் நாடுகள் தமக்கு உணவு விளைவித்துக் கொள்வதுடன், பூசணிக்காய் போலப் பெருத்த நம் நாட்டுக்கும் பிச்சை தருகிறேன் என்கின்றன. ஏன் இந்த மானக்கேடான, பிறர் கேலிக்குரிய நிலை?

## அசோக சக்கரத்தின் பேரால்!

கம்யூனிஸ்டுகள் இன்று வேட்டையாடப்படுகின்றனர். எட்டுக் கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டனர் என்ற செய்திகளை இன்று நீங்கள் சர்வசாதாரணமாகப் பத்திரிகைகளிலே காணலாம். கம்யூனிஸ்டுகளென்ன விலங்குகளா? விலங்குகளை வேட்டையாடுவது போலக் கம்யூனிஸ்டுகளைச் சர்க்கார் ஏன் வேட்டையாட வேண்டும்? சர்க்காருக்கு வேட்டையாட மிருகங்கள் அகப்படவில்லையா? அல்லது மிருகங்களை வேட்டையாட சர்க்கார் அஞ்சுகிறார்களா?

அன்பின் பேரால், அறநெறியின் பேரால், அசோகச் சக்கரத்தின் பேரால் ஏன் வேட்டையாட வேண்டும்? ஆட்சியிலே அறநெறியைக் கடைப்பிடிப்பவர்களாகச் சொல்கிறவர்கள் கட்சியிலே துப்பாக்கி நெறியை ஏன் கைக்கொள்கிறார்கள்? முன்பெல்லாம் இராஜாக்களுக்கு வேட்டைக்காடுகள் இருந்தனவாம். அவ்வேட்டைக் காடுகள் புலி, சிங்கம் உள்ள காடுகளாயிராது. புலி சிங்கம் இல்லாத இடத்திற்குத்தான் காடு என்ற பெயரைச் சூட்டுவார்கள். அங்கே மான் ஓடும். அந்த மானை ராஜாக்கள் வேட்டையாடுவர். அதுவும் எல்லைக்குட்பட்ட, தப்பிஓட முடியாத காட்டில்—வேட்டை நாய்கள், வேடர்கள் உதவிகொண்டு

ஆடுவார்கள். அம்மாதிரி வேட்டையை இன்றைய சர்க்கார் ஆடுகிறது — ஆனால் மான் வேட்டையல்ல; மனித வேட்டை. மரஞ்செடி கொடிகளடர்ந்த காட்டிலல்ல; மக்கள் வாழும் காட்டில் — மக்கள்கூட அணுக முடியாமல் வளைத்து மதிலிடப்பட்ட சிறைக்கோட்டக் காட்டில்!

காட்டை நாடாக்க வேண்டிய சர்க்கார், நாட்டைக் காடாக்குகிறது.

## உண்மையான சமூகத்தொண்டர்கள்

ஒரு மனிதர் உயிர்வாழ்வதற்கு முக்கியமாக வேண்டியவை உணவு, உடை, இருப்பிடம். உணவு வியாபாரப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறது. உடை வியாபாரப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறது. இருப்பிடம் வியாபாரப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறது. இம்மூன்று துறையிலும் பயன்படுத்துவோர் மட்டுமல்ல — தொழிலாளரும் கசக்கப்படுகின்றனர்; வியாபாரிகளால், அதுவும் பெருத்த முதலாளிகளால், அரசாங்கத்தாரின் சலுகையும் ஆதரவும் பெற்ற, கொழுத்த ஏகபோகப் பெர்மிட்காரர்களால்! ஆகவேதான் விவசாயம், வீடு, தொழில் ஆகியவற்றின் ஆதிக்கத்தைத் தனிப்பட்டவர்களிடம் விட்டுவைக்கக் கூடாதென்று நாங்கள் கூறுகிறோம். தொழில் நிபுணத்துவம் வாய்ந்த முதலாளிகளிடமிருந்தே அரசாங்கம் நன்கு வேலை வாங்கவேண்டும். இது சம்பந்தமாகச் சர்க்காருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். டி. வி. எஸ். மோட்டார் சர்வீஸை நடத்தும் முதலாளியைக் கண்டு அமெரிக்க நாட்டினரே வியந்து பாராட்டியிருக்கின்றனர். அவரைச் சர்க்கார் அணுகி, "சொந்தமாகப் பொருளீட்டியது போதும். இனி நாட்டு மக்கள் வாழ்வை வளமாக்க உதவுங்கள். உங்கள் திறமையை அதற்குப் பயன்படுத்துகிறோம். அதற்குத் தக்க மதிப்பும், சம்பளமும் — இரண்டும் தருகிறோம். மாதச் சம்பளமாக நல்ல ஊதியம் பெற்றுக்கொண்டு சர்க்கார் சார்பிலே உங்கள் திறமையைப் பயன்படுத்துங்கள்" என்று கூறலாம். டி. வி. சுந்தரமய்யங்கார் ஒரு

பார்ப்பனர் என்பதற்காக இவ்வாறு கூறுகிறேன் என்று எண்ண வேண்டாம். திரு. ஜி. டி. நாயுடு அவர்களிடம் விஞ்ஞான அற்புதங்கள் பல உள்ளன. அவரையும் இது போலவே அழைத்து அரசாங்கம் பயன்படுத்தலாம். அவர்கள் சொந்தத் தொழிலை நடத்துவது போலச் சம்பளம் வாங்கிக்கொண்டு பொதுத் தொழிலை நடத்தவில்லையானால், அவர்கள் தன்னலத்தை அரசாங்கம் அம்பலப்படுத்திப் பொதுமக்கள் மன்றத்தில் அவர்கள்மீது குற்றச்சாட்டுப் படிக்கவும் சந்தர்ப்பம் ஏற்படும். அவர்கள் உண்மையாய் உழைத்தால், அவர்களில் யார் ஆதாய நோக்கம் மட்டும் உள்ளவர், யார் சமூகத் தொண்டர்கள் என்பதும் தெரிந்து போகும்.

இதுபோன்றே ஒவ்வொரு தொழிலிலும் திறமை வாய்ந்தவர்களை, அவர்கள் முதலாளிகளாயிருந்தால் கூடச் சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இதைச் செய்யுமா சர்க்கார்?

நான் இன்று காஞ்சியிலிருந்து பஸ்ஸில் வந்தேன். டிரைவர் கார் ஓட்டுமிடத்துக்கு மேலே இராமர் பட்டாபிஷேகம் படம் ஒட்டியிருந்தது. அதற்கு மாலையும் சூட்டப் பட்டிருந்தது. அழகிய மாலையுடன் கூடிய அந்தப் படமா டிரைவர் கார் ஓட்டுவதற்குத் துணையாக இருக்கிறது? இல்லையே! பஸ் ஓட்டும் டிரைவர் அவருடைய கவனத்தையெல்லாம் கார் ஓட்டுவதிலேயே செலுத்தவேண்டும். அதை விட்டு இராமர் பட்டாபிஷேகப் படத்தை நம்பி அவர்கள் ஓட்டலாமா? ஓட்ட முடியுமா? நம் நாட்டிலே தொழிலாளத் தோழர்கள் இன்னும் எந்த நிலையிலே இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக இதைச் சொன்னேன்.

நாம் தொழிலாளியிடம் தோழமையோடு இருக்கிறோம். தொழிலாளத் தோழர்களைத் 'தோழர்களே' என்று அழைக்கிறோம். தோழமை வேறு, நட்புரிமை வேறு. தோழன் என்பதற்கும், நண்பன் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. நண்பனிடம் அனுதாபத்தையும் உதவியையும்

எதிர்பார்ப்பார்கள். தோழனிடம் ஒத்துழைப்பையும் ஒத்த இன்ப துன்ப உணர்ச்சிகளையும் காணலாம்.

## தேர்தல் தூண்டில்!

தொழிலாளிகளின் கூலியை உயர்த்த அரசாங்கத்தார் ஆவன செய்யவேண்டும். காங்கிரஸ் ஆட்சியிலே தொழிலாளர் களிப்புடனிருக்க வேண்டுமென்பது நம்முடைய ஆசை. காமராஜ நாடார் போகிற இடங்களிலெல்லாம், "திராவிட இயக்கத்தார் தேர்தலில் நின்று பார்க்கட்டுமே!" என்று சொல்லிக்கொண்டே போகிறார். சும்மா நின்று தான் பார்த்துவிடுவோமே என்று தேர்தலில் நின்றுவிட்டால், காமராஜரின் நிலை என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை. ஆனால், தேர்தலுக்கு நிற்கும் நோக்கம் எங்களுக்கு இல்லையென்பதைப் பல மேடைகளிலே கூறியிருக்கிறோம். கதர்ச் சட்டைக்குள்ளேயே அவருக்கு எத்தனையோ போட்டி உண்டு. அதுகளை எதிர்த்து அவர் வெல்வதே பகீரதப் பிரயத்தனமாயிருக்கப் போகிறது. அவர்களை வென்றுவிட எண்ணிக் கனுக் காண்கிறார், காமராஜர். அதற்கிடையே நம்மிடையேயும் அந்த ஆவலைத் தூண்டப் பார்க்கிறார் அவர், தன் எதிரிகளை நாம் எதிர்த்துப் பலவீனப்படுத்திவிடுவோம் என்று எண்ணிக்கொண்டு. அந்த ஆசையும் நமக்கு இல்லை, அந்தப் பருப்பும் வேகாது என்று அவருக்குக் கூறுகிறேன்.

அண்மையில் உழவர் மாநாட்டிலே, ஓமந்தூராரும் நானும் ஒன்றாக, ஒரே மேடையில் பேசினோம். இதைக் கண்டு பல பத்திரிகைகள் உண்மைக்கு மாறாக, அதுவும் விதம் விதமாக எழுதி வருகின்றன. ஓமந்தூரார் அண்ணாத்துரையுடன் சேர்ந்துவிட்டார் என்று எழுதிற்று ஒரு பத்திரிகை. ஓமந்தூரார் அண்ணாத்துரையுடன் சேரலாமா என்ற வினாவைக் கிளப்பியது மற்றொன்று. இதுபோன்று, இன்னும் பல, இல்லாததையெல்லாம் சில பத்திரிகைகள் கயிறு திரித்துவிட்டன. நானும் ஓமந்தூராரும் ஒன்றுகூடி ஒரு மாநாட்டிலே பேசியதிலே காங்கிரஸ்காரர்களுக்குச்

சந்தேகம் தோன்றியிருக்கிறது. இத்தகைய சந்தேகமும், சஞ்சலமும் அச்சமும் பதவி ஆசையுடையவர்களுக்கு ஏற்படுவது இயற்கை. ஆசையும் அச்சமும் இப்படி அவர்கள் முகாமில் இருக்கின்றன. எங்களுக்குள் யாருக்கும் அந்த ஆசையும் கிடையாது, அச்சமும் கிடையாது.

நடுநிசியிலே மாடியில் திருடிய பொருளை ஒருவன் எடுத்துக்கொண்டு செல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். போலீஸ்காரரைக் கண்டதும் திருடிய பொருளை மடியிலே வைத்திருப்பவன் பயப்படவேண்டும். மடியிலே ஒன்று மில்லாதவன் போலீஸ்காரர்களைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.

காங்கிரஸ்காரர்கள் பல கட்டங்களைத் தாண்டியாக வேண்டும். காங்கிரஸ்காரர்கள் முதலிலே கிருபளாணியின் கட்சியைத் தாண்டியாக வேண்டும். அதைத் தாண்டிய பின்னர் ஜஸ்டிஸ் கட்சியைத் தாண்டியாக வேண்டும். பின்னர் ஓமந்தூரார் கட்சியைத் தாண்டியாக வேண்டும். அதையும் தாண்டியான பின்பு, சாவகாசம் இருந்தால், நாட்டிலே இன்று நல்லதொரு பிரச்சாரம் செய்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கிக் கனவு காண முடியும்.

## நமது முழக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இனி நல்ல வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட இருக்கின்றன. 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதுதான் நமது மூலாதாரக் கொள்கை — உரிமை முழக்கம்.

டில்லி ஆட்சி, முதலாளிகளுக்கு நல் ஆதரவு தந்து வருகிறது; இது கூடாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் பாட்டுப்பாடவும், அதற்கு ஒத்து மத்தளம் தட்டிக் கொண்டு பிர்லாக் கோஷ்டி ஆடவும், டில்லி ஆர்ப்பாட்டத்தினால் ஏற்படும் அலறல் கண்டு மக்கள் வாடவுமான நிலையிருக்கிறது. "மாடு மழுவாட மங்கை சிவகாமி யாட" என்று தொடங்கும் பாடலை நீங்கள் கேட்டிருப்

யீர்கள். அப்படியே அமெரிக்கா ஆட, டாட்டா...பிர்லா ஆட, டில்லி ஆட, டில்லியுடன் இணைந்த சென்னை சிவகாமி யாட, இப்படி எல்லாம் ஆடவேண்டியிருக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம் மற்ற எவர் வேண்டுமானாலும் ஆடட்டும். சென்னை சிவகாமி ஆடவேண்டாம்; அவளுக்கும் டில்லி நடராஜருக்கும் இடையேயுள்ள ஆதிக்கக் கயிறை, அடிமைத் தாலியை அறுத்துவிடுங்கள் என்றுதான்! அப்போது மங்கை சிவகாமி ஆடமாட்டாள். ஆடினாலும் தானாக ஆடட்டும், ஆட்டிவைக்க ஆடவேண்டாம்.

நம் நெசவாளர் பரம்பரை எவ்வளவு பழமைவாய்ந்தது! எவ்வளவு பெருமை வாய்ந்தது! சங்க இலக்கியங்களிலே, சிலப்பதிகாரத்திலே, பெருங் கதையிலே எலி மயிரினால் பட்டு நெய்யப்பட்ட தமிழகத்தைப்பற்றிச் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

இது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, பிறநாடுகள் துணி உடுத்தத் தொடங்கு முன்பு, வடநாட்டில் அசோகன் ஆண்டதற்கு முன்பு—அந்த நெசவாளர் பரம்பரையிலே வந்தவர்களின் இன்றைய நிலையைப் பாருங்கள். அன்று எலி மயிரில் பட்டு நெய்தார்கள். இன்று எலியின் பாடு தேவலை — ரேஷன் கடையிலும் பதுக்கல் சந்தையிலும் தின்று அவை கொழுக்கின்றன. கூடவே இரண்டுகால் எலிகளும் தின்று பெருக்கின்றன. ஆனால் தொழிலாளர்களுக்கு, அதுவும் இயந்திரத் தொழில் வளர்ச்சியற்ற திராவிடநாட்டுப் பழந் தொழிலாளர்களுக்கு வாழ்வு முதலிலும், நல் வாழ்வு, புது வாழ்வு, முழு வாழ்வு படிப்படியாகவும் வரவேண்டும் என்பதற்காகத்தான் மங்கை சிவகாமி தன் புலித்தோல் போர்த்த ஆடல் கிழவனிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறோம்.

உலகிலே மே விழாவைச் சோவியத் ரஷ்யாவுக்கே சொந்தமான விழா என்று கருதுபவர் உண்டு. ஆயினும் இந்த மே தினத்தை மேதினியெங்கும் உள்ளவர்கள், எமக்கும் அந்நாள் விழாநாள்தான் என்று உரிமை கொண்டாடும் அளவுக்கு அது இன்று பிரபலம் அடைந்து

விட்டது. மே விழா கம்யூனிஸ்டுகளின் விழாவென்றும் அதைத் திராவிட இயக்கத்தார் கொண்டாட வேண்டிய அவசியமில்லை என்றும் கருதுவது சரியல்ல.

பாட்டாளி மக்கள் விடுதலை விழா, மே தினம். அதற்குக் கட்சி எல்லை, நாட்டு எல்லை எதுவும் இல்லை. பாட்டாளி மக்களுக்கு உரிமையுள்ளதாகக் கூறப்படும் நாடுகளெல்லாம் அதன் எல்லைக்கு உட்பட்டவையே. பாட்டாளிகளின் இனத்தவர், அவர்களை ஆதரிக்கும் கட்சியினர் யாவரும் அதைக் கொண்டாடும் உரிமை உடையவர்களே. பாட்டாளிகளின் வாழ்வுக்காக, விடுதலைக்காக, உரிமைகளுக்காக, மே தினத்தைப் பாட்டாளிகளும், பாட்டாளி இனத்தவருமாகிய நாம் கொண்டாடுகிறோம்.

திராவிட நாட்டுப் பிரிவினையில் முழு உரிமை கொள்ள வேண்டியவர்கள் தொழிலாளத் தோழர்களே. நம் ஆயுட் காலத்திற்குள் நாம் டில்லி சர்க்காரின் மக்களாக வாழாமல், திராவிடப் பெருங்குடி மக்களாக வாழ்வோம் என்ற உறுதியோடு நீங்கள் வீடு செல்ல வேண்டும். திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் புதுவாழ்வு மலரச் செய்ய வேண்டுமென்ற உறுதியை மனதிலே கொண்டு நீங்கள் பணியாற்ற வேண்டும். உங்கள் நாடு தொழிலாளர் உரிமை ஆட்சியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் மே விழாக் கொண்டாட்டத்தில் முக்கிய பங்கு எடுத்துக் கொள்கிறோம்.

இவ்விழாவை இவ்வளவு சிறப்பாக நடத்த உதவி புரிந்த அன்பர்களுக்கெல்லாம் கழகச் சார்பாக என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4244
RADICAL LIBRARY
MADRAS-1

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை ஆற்றிய

# தலைமையுரை

தொழிலாளத் தோழர்களே!
தி. மு. க. தோழியர் தோழர்களே!!

வணக்கம். தொழிலாளர் விழாவாகிய மே நாள் விழாவைக் கொண்டாடத் தொழிலாளரும் தொழிலாளர் இனத்தவருமாகிய, திராவிடராகிய நாம் கூடியிருக்கிறோம். பல ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் மே நாளைக் கொண்டாடியிருக்கிறது. இவ்வாண்டும் அதனைச் சிறப்பாக நடத்த முன்வந்த திருவல்லிக்கேணி தி. மு. கழகத்தைப் பாராட்டுகிறேன்.

இந் நாடு தேரும் திருவிழாவும் கொண்டாடுகிற நாடு. அவையனைத்தும் பெரும்பாலும் மத விழாக்களாகவே இருக்கும். அவை கடவுளுக்காக அல்லது கடவுள்களுக்காக, அதாவது புரோகிதர் நலங்களுக்காக நடத்தப்படுபவை; மக்களுக்காக நடத்தப்படுபவையல்ல. அவற்றில் மக்களினம் செலவு செய்யும், உழைக்கும். ஆனால் பூசாரியும் பூசாரியினமும் உழைக்காது; செலவு செய்யாது; ஏனினும் முழுப்பலன் பெறும். மக்கள் அவமதிக்கப்படுவார்கள், பூசாரியினம் மதிக்கப்படும். மக்கள் தேரிழுப்பர்; அவர்கள் பணத்தில் உண்டு கொழுத்த பூசாரியினம் தேரிலேறி அமர்ந்து வலம்வரும்.

சில ஆண்டுகளாக இன்னொரு வகை விழா நடத்தப் பட்டு வருகிறது — அதுவே 'சுதந்தர விழா' என்ற புகழ்ப் பெயரில் மறைந்து நிகழ்வது. அதிலும் மதவிழாவைப் போலவே யானைகளும் ஒட்டகைகளும் மேளதாளங்களும் உண்டு. அது கோயில் விழா அன்று, கோமான்கள் விழா. அது அரசாங்கம் நடத்தும் விழா, அரசாங்க நிலையங்களும் அரசியல் இலாக்காக்களும் அரசாங்கத்தின் பிடியிலுள்ள ஏழைப் பள்ளியாசிரியரும் சிறுவர் சிறுமியரும் ஈடுபடுத்தப் படும் விழா. ஆதிக்கக் குழுவினரின் விழா. மக்கள் கடவுட் பற்றை, பக்தியைப் புரோகிதர் தம் வாணிகச் சரக் காக்குகின்றனர் என்றால், ஆதிக்கவாதிகள் மக்கள் வறுமையை, பட்டினியை, கொடுமைகளைத் தம் கள்ள வாணிகச் சரக்காக்குகிறார்கள். ஆறவுன்சு அட்டூழியம், உடைப் பஞ்சம், குடிசைப் பஞ்சம் ஆகியவற்றை மக்க ளிடையே பரப்பிவிட்டு, அவர்கள் பெயரால் தாமே தம் மைப் பாராட்டி நடத்தும் இவ்விழாவில், மத மூடபக்தி விழாவில் மக்களுக்கு இருக்கும் போலி ஆர்வம்கூட இருக்க முடியாது என்று கூறத் தேவையில்லை.

மேநாள் விழா இவை போன்ற விழா அல்ல. அது தொழிலாளர் விழா. மக்கள் ஆர்வத்துடன், ஆத்திரத் துடன், அக்கரையுடன் கொண்டாடும் நன்னாள்! மேலும் மதவிழாப் போல, நாட்டுவிழா போல அது மத எல்லைக் குள்ளோ, நாட்டெல்லைக்குள்ளோ அடங்கிய விழா அன்று. அது உலகமளாவிய சர்வதேசிய விழா. எல்லா நாட்டிலும் உள்ள எல்லாக் கட்சித் தொழிலாளரும், தொழிலாளர் நல னில் அக்கரையுள்ள எல்லா மக்களும் கொண்டாடும் விழா.

தமிழர் விழாவாகிய பொங்கல் விழா, மலையாளிகள் விழாவாகிய ஓணவிழா ஆகியவற்றைப் போல, மேநாள்

விழா மக்கள் விழா ஆகும். பொங்கல் விழாவும் ஓண விழாவும் உழவர் அறுவடைக்குப்பின் உண்டாட்டயர்ந்து மகிழ்ச்சி கொண்டாடும் விழா; மே விழாவும் பண்டை நாளில் மேனாடுகளில் இத்தகைய உழவர் மகிழ்ச்சி விழா ஆகவே தொடங்கிற்று. ஆங்கில மொழியில் 'மே' என்றால் மகிழ்ச்சி என்று பொருள். அம்மகிழ்ச்சி விழா நடக்கும் இன்ப மாதமே மே மாதம் எனப்பட்டது. தமிழர் பொங்கலில் கரும்பு நட்டாடுவது போல, மேனாட்டினர் மே மரம் (May Pole) ஒன்றை ஊர் அம்பலம் அல்லது ஊர்ப் பொதுவில் நட்டு, அதைச் சூழநின்றாடிக் களிப்பார்களாம்!

சென்ற நூற்றாண்டில் மேநாள் விழாவைக் கொண்டாடிய தொழிலாளர்மீது ஏவப்பட்ட அடக்குமுறை உலகத் தொழிலாளர் சமூக முழுவதையும் தட்டி எழுப்பிற்று. தொழிலாளர் உலகில் ஒற்றுமை உணர்ச்சி ஏற்படுத்திய இவ்விழா அன்று முதல் தொழிலாளரிடையே கட்டுப்பாடும் கூட்டுணர்ச்சியும் உண்டுபண்ணுவதற்குரிய சின்னமாக, எழுச்சி விழாவாகப் புத்துருப்பெற்றது. "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுவீர்" என்பதே அத்திருநாளின் விழா முழக்கம் ஆயிற்று.

தொழிலாளர் திருநாள் இது; தொழிலாளர் இனத்தவராகிய நாம் இதனைக் கொண்டாடுகிறோம். திராவிடரில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் பேர் தொழிலாளர்தாம். அதாவது கிட்டத்தட்ட திராவிடர் அனைவரும் தொழிலாளர்களே. அனைவரும் இயந்திரத் தொழிலாளர் அல்ல; ஆனால் இது நாட்டில் தொழில் வளராததால் ஏற்பட்ட நிலைமை மட்டுமே. இயந்திரத் தொழிலாளரிலும் கேடுகெட்ட நிலையில் பிற

தொழிலாளர்கள் — கட்டை பிளப்பவர், கல்லுடைப்பவர், உடலை உருக்கி உழைத்தும் உணவு கிட்டாதவர், உழைப்பே கிட்டாது பட்டினி கிடப்பவர் ஆகிய பன்னூறாயிரக்கணக்கான திராவிடர் உள்ளனர். ஆகவேதான் இயந்திரத் தொழிலாளர் மட்டுமின்றி, எல்லா வகைத் தொழிலாளரும் தொழிலாளர் இனத்தவரும் அடங்கிய திராவிடர் மே விழாவைக் கொண்டாடுவதற்கு உரியவர்.

மாஸ்கோவின் மணத்தை, பகுத்தறிவியக்கத்தின் ஒளியை, தன்மானத்தின் நறுந்தென்றலைத் தமிழகத்திலும் துணைக்கண்டத்திலும் முதன் முதல் பரப்பிய இயக்கம் நம் இயக்கம். ஆகவேதான் நாம் மாஸ்கோவின் கொடி நிழலில் கூடுபவருடன் இவ்விழாவில் ஒன்றுபட்டு நின்று இவ்விழாவைக் கொண்டாடுகிறோம்.

இயந்திரத்தில் ஊடாடும் தோழர்கள் யார்? திராவிடர். உழவர் யார்? திராவிடர். எல்லாத் தொழிலாளரும் திராவிடர். திராவிடர் வேளாண்மைக்கும் தொழிலுக்கும் உயர்விடம் தந்தனர். ஆரியர் வேளாளரைக் கடைப்பட்ட நான்காம் வருணமாகக் கொண்டனர். வேளாளரிலும் பெருஞ்செல்வரே இந்நான்காம் நிலையிலுள்ளவர். மனிதரில் கடைசிப் பட்டியினர் இவர்கள். உழுதுண்ணும் சிறுகுடி வேளாளரும், கூலி உழவரும் பிற தொழிலாளரும் தொல்காப்பியர் காலத்தில் ஆரியரால் ‘வினைசெய் மாக்கள்’ என்று அலைக்கழிக்கப்பட்டு, இன்றும் மனிதரின் நான்கு படிகளிலும் இழிந்த ஐந்தாம் படியாகத் தாழ்த்தப்பட்டுள்ளனர்.

உழைப்பவர் உழைப்பால் உலகில் செல்வம் ஏற்படுகிறது. அதை வளப்படுத்துபவர், அதனால் வரும் இன்பத்தை வளர்ப்பவர் அறிஞர், கலைஞர். ஆனால் அதன்

பயன் பெறுவோர் முதலாளிகள். அவர்கள் உழையாமல்; உடலுழைப்பு மட்டுமல்ல, அறிவுழைப்பும் இல்லாமல், சுரண்டுதல் தவிர வேறு கலைப்பண்பில்லாமல், உழைப்பவர் உழைப்புச் செல்வத்தை உறிஞ்சி உண்பவர் ஆவர். செல்வம் அவர்கள் கையில் இருப்பதால், அவர்கள் அறிஞரையும் கலைஞரையும் தம் சுரண்டல் கருவிகளாக்கி மனித நாகரிகத்தையே அலைக்கழித்து வருகின்றனர். உலகின் ஆட்சி முறை, சட்டம், மதம், ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றின் மீதும் இம்முதலாளித்துவம் ஏறி அமர்ந்து பேயாட்டம் ஆடுகிறது.

கம்யூனிஸ்ட் இயக்கமும் திராவிட இயக்கமும் முதலாளி, தொழிலாளி, அறிவு வகுப்பார் அல்லது நடுத்தர மக்கள் என்ற வேற்றுமை அகற்றி, வகுப்பு வேறுபாடற்ற சமுதாயத்தை உண்டுபண்ணப் பாடுபடுகின்றன. மே விழாவை இவ்விரண்டு இயக்கங்களும் கொண்டாடுவதன் பொருள் இதுவே.

ஆனால் கம்யூனிஸ்ட் இயக்கம் பிறந்தது ஜெர்மனியில்—ஜெர்மனிய அறிஞரான கார்ல் மார்க்ஸ் மூளையில். திராவிட இயக்கம் பிறந்தது திராவிட நாட்டில், திராவிடநாட்டுப் பண்பாட்டில், திருவள்ளுவரின் தீந்தமிழ்ச் செந்நெறியில், சங்க இலக்கிய அறிவுக் குகையில்! ஒன்று உலகத்தில் பரந்து திராவிடம் நோக்கி வருகிறது-மற்றது திராவிடத்தில் பிறந்து உலகை நோக்கி ஒளி வீசுகிறது. கம்யூனிஸ்ட் இயக்கம் மக்கள் பொருளாதார வாழ்வடிப்படையாக மக்கள் வாழ்வை அலசிக் காட்டுகிறது. திராவிட இயக்கம் மக்கள் பகுத்தறிவடிப்படையாக, அவர்கள் வாழ்வு தாழ்வுகள் முழுமையையுமே அலசிக்காட்டிச் செப்பம் செய்ய முயல்கிறது. கம்யூனிஸ்ட் இயக்கம் பொருளாதார் பேதமற்ற,

வகுப்பு வேறுபாடற்ற சமுதாய ஆட்சியை அமைக்கக் கனவு காண்கிறது. திராவிட இயக்கம் அறிவு, அன்பு அடிப்படையில் சமத்துவ, சமசந்தர்ப்ப, கூட்டார்வச் சுவர் எழுப்பி நல்வாழ்வுக் கூடமமைக்க முனைகிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு முன்னணி இயக்கங்களுள் ஒன்றாகிய திராவிட இயக்கம் ஒருபடியாயிருக்கும் என்றே கம்யூனிஸ்ட் தோழர்கள் இன்றும் கருதி வருகின்றனர். ஆனால் கம்யூனிஸ்ட் சமுதாயமோ, ரஷ்யாகூட இன்னும் முற்ற அமைத்துவிடாத கம்யூனிஸ்ட் குறிக்கோள் சமுதாயமோ, திராவிடப் புதுமலர்ச்சிக்குரிய முதற்படியாக அமையத்தக்கதே என்று நாம் கொள்கிறோம்.

மே விழாவில் நாம் கலந்து கொள்வதன் மூலம் தொழிலாளர் பொருளியல் வாழ்க்கைத்தரத்தை மட்டுமன்று, அவர்கள் வாழ்வையும், பண்பையும், அறிவையும், இன்பத்தையுமே நாம் பெருக்க முயல்கிறோம். அவர்கள் அறியாமை, ஏலாமை, முனையாமை, தம் வலுஉணராமை, தம் நேர்மை உரிமை அறியாமை முதலிய எல்லாவகை 'ஆமை'களையும் களைந்து அவர்களை இயற்கையாகிய வானவெளியில் தங்குதடையின்றி உலவி மகிழும் இசைப் பறவைகளாக ஆக்க விரும்புகிறோம்.

அதற்கு உங்களுக்கு வழிகாட்டும் அறிவு வழிகாட்டியாகிய நம் பொதுச் செயலாளர் அறிஞர் சி. என். அண்ணாத்துரையின் முழக்கத்தை இனி நீங்கள் கேட்க இருக்கிறீர்கள். அவர் வழி கடைப்பிடித்து முன்னேறுவோமாக!

பொன்னி அச்சகம், சென்னை — 21.

எமது அடுத்த நாடகம்

# படுகுழி

ஆசிரியர்:
செல்வி அருண்மொழி. பி. ஓ. எல்;

★

அலமேலு நிலையம்,
13, அருணாசல ஆச்சாரி தெரு,
சென்னை—5.

திராவிட முன்னேற்றக் கழகத்தி
மாநில மாநாட்டில் பெண்கள்
நடிக்கப்படுவதற்காகத் திராவிடப்
பணியால் இயற்றப்பட்ட தமிழ் நாடகம்

# போராட்டம்

ஆசிரியர் :

செல்வி அருண்மொழி பி. ஒ. எல்.

ஆலை முதலாளி அருணசலத் தேவர் அடக்குமுறை, சலீம்—நங்கை காதல், நீதி மன்றத்தின் சட்டக் குழறுபடி ஆகியவற்றைச் சித்தரிக்கும் ஓவியம்.

விலை 8 அணா

★

விவரங்கட்கு :

**அலமேலு நிலையம்,**
13, அருணாசல ஆச்சாரி தெரு,
சென்னை—5.

PONNI ACHAKAM, MADRAS 21